Registered as a Newspaper | பக்கங்கள் 4 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் நாளிதழ் | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 14 | ( 29 12 93 ) | புதன்கிழமை | ஓசை 314

## இருநூறு தபால்பொதிகள் அடுத்தவாரம் அனுப்பப்படும்

சுமார் இருமாத இடைவெளிக்குப்பின்னர் தபால்பொதிகள் கப்பல்மூலம் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன. இருநூறு தபால் பொதிகள் அடுத்த வாரம் கொழும்பிலிருந்து கப்பலில் அனுப்பிவைக்கப்படும் என்று தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தபால் உறைகளுக்குள் பென்டோர்ச் பற்றரி, பணநோட்டுக்கள் அனுப்பிவைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து கடற்படையினரால் தபால்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன என அவ் அதிகாரி கூறினார். கொழும்பில் வடபகுதிக்கு அனுப்பிவைப்பதற்காக உள்ள ஆயிரம் பொதிகளில் இதுவரை 200தபால்பொதிகளே சோதித்துமுடிக்கப்பட்டுள்ளன. (4ஆம் பக்கம் பார்க்க)

# எட்டு பிரிகேடியர்களின் பதவி உயர்வுகள் ரத்து!

## ராணுவ அதிகாரிகள் மட்டத்தில் அதிருப்தி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் எட்டுப் பிரிகேடியர்களுக்கு பதவி உயர்வு ரத்துச் செய்யப்பட்டுள்ளது. சேவை மூப்பின் அடிப்படையில் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட இருந்தவேளையில், களத்தில் நின்று நேரடியாக யுத்தத்தில் ஈடுபடும் அதிகாரிகளுக்கே பதவி உயர்வு வழங்கப்படும் என்ற சிறிலங்கா ஜனாதிபதியின் அறிவிப்பிற்கிணங்க இந்த எட்டு பிரிகேடியர்களின் பதவி உயர்வு ரத்துச்செய்யப்பட்டுள்ளது. இதேசமயம் பல இராணுவ அதிகாரிகளுக்கு உயர்பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது, அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வடக்கு-கிழக்கில், யுத்த முனையில் விடுதலைப் புலிகளுடனான சண்டையில் இராணுவம் பெரும் தோல்வியைச் சந்தித்து வருகிறது. இந்தத் தோல்விகளுக்கு இராணுவ உயர் அதிகாரிகள் யுத்த முனையில் நேரடியாக பங்குபற்றாமையே காரணமாகும். இதனைக் கருத்தில் எடுத்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க களத்தில் நிற்பவர்களுக்கு உயர்பதவி வழங்க முடிவுசெய்துள்ளார்.

யுத்த முனையில் திறமை, வீரசாகசம் காட்டுபவர்களுக்கே பதவி உயர்வில் முதலிடம் வழங்கப்படும் என்று அவர் முடிவு எடுத்துள்ளார். இதனால் பதவி உயர்வு பெற இருந்த எட்டு பிரிகேடியர்களின் பதவி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவர்களின் பெயர்களை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன சிபார்சு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் பல இராணுவ அதிகாரிகளுக்கு உயர் பதவி வழங்கப்படவுள்ளது இது ஏனைய பல இராணுவத்தினருக்குஅதிருப்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ்சேவைக் கால அடிப்படையில் பதவி உயர்வு பெறஇருந்த எட்டு பிரிகேடியர்களும் பதவி உயர்வுகளை இழக்கின்றனர்.

## ஐந்து பிரிகேடியர்களுக்கு மேஜர் ஜெனரல் பதவி

தற்போது பிரிகேடியர் தரத்திலிருக்கும் ஐந்து சிறிலங்கா படை அதிகாரிகள் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட உள்ளனர் மேலும் சில அதிகாரிகளுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட உள்ளன.

பிரிகேடியர்களான எம். யூ. செனவிரத்தினா, ஜானக பெரேரா, வீரசூரிய, அசோகா ஜெயவர்த்தனா, நளின் அங்கமன உட்படபலர் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம சிறிலங்கா இராணுவத்தின் ஆளணி அதிகாரியாகவும் மேஜர் ஜெனரல் றோகான் தழுவத்த அதிரடிப்படையின் வழிநடத்தல் அதிகாரியாகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

# போரை முடிவுக்கு கொண்டுவர சமாதான முயற்சிகள் அவசியம்!

## கொழும்பு மாநாடொன்றில் வற்புறுத்து

(கொழும்பு)

போரை முடிவுக்கு கொண்டுவர சமாதான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் எனவும் போர் நிறுத்தப்பட்டு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் எனவும் கொழும்பில் நடைபெற்ற மாநாடொன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

'அமைதிக்கான பாதை' எனும் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண வலியுறுத்தும் மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

''நீட்ஸ்'' (NEEDS) என அழைக்கப்படும் வட கிழக்கு பொருளாதார அபிவிருத்திச் சங்கம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது.

இம் மாநாட்டில் போரை முடிவுக்கு கொண்டுவர சமாதான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. தொடரும் போருக்கும், இனப்பிரச்சினைக்கும் சமாதான தீர்வுகாணும் விஷயத்தை அரசியல் வாதிகளிடமும் அரசியல் கட்சிகளிடமும் விட்டுவிடமுடியாது என இம் மாநாட்டில் பேசிய பலரும் வலியுறுத்தினர். தமிழர்களிடம் எந்த தீர்வும் திணிக்கப்படக்கூடாது ஆனால் போர் நிறுத்தப்படவேண்டும் புலிகளுடன் பேச்சுநடத்த வேண்டும் என தென்மாகாண பௌத்தபிக்கு வட்டகம சமித்த தேரோ வலியுறுத்தினார்.

தமிழர்களின் கோரிக்கைகளையும் அவர்கள் படும் இன்னல்களையும் சிங்களவர்கள் உணரும் காலம் வந்துவிட்டது இதுதான் பேச்சுக்கான அடிப்படையாக இருக்க வேண்டும் என அத்தேரோ மேலும் தெரிவித்தார்.

போர் மூலம் எத்தீர்வும் காணமுடியாது என்பதை கடந்த 10 ஆண்டுப் போர் காட்டுகின்றது. என சமூக, சமய மையத்தைத் சேர்ந்த கிறிஸ்தவபிதா திஸ்ஸ பாலசூரிய குறிப்பிட்டார். இலங்கை இனப்பிரச்சினையில் பலப் பிரயோகம் தெற்கில் ஆரம்பித்தது இது தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டியது என அவர் கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காமினிக்கு வழங்கப்பட்டுவந்த பொலிஸ் பாதுகாப்பு திடீர் நீக்கம்

## பதவி கவிழ்ப்பு முயற்சியின் எதிரொலி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான காமினி திசநாயக்காவிற்கு கடந்த மேமாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்றுமுன்தினம் முதல் திடீரென நீக்கப்பட்டுள்ளது.

கடந்த மேமாதம் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபின்னர், கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட நால்வர் ஆயுதங்களுடன் பாதுகாப்பிற்கென வழங்கப்பட்டிருந்தனர்.

பின்னர் மத்திய மாகாண சபை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து பின் தொண்டமானின் ஆதரவுடன் முதலமைச்சராக இவர் முயற்சிப்பதனாலேயே இவ்வாறு பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமையவே இவ்வாறு பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:

# காமினிக்கு வழங்கப்பட்டுவந்த
# பொலிஸ் பாதுகாப்பு திடீர் நீக்கம்

### பதவி கவிழ்ப்பு முயற்சியின் எதிரொலி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான காமினி திசநாயக்காவிற்கு கடந்த மேமாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்றுமுன்தினம் முதல் திடீரென நீக்கப்பட்டுள்ளது.

கடந்த மேமாதம் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபின்னர், கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட நால்வர் ஆயுதங்களுடன் பாதுகாப்பிற்கென வழங்கப்பட்டிருந்தனர்.

பின்னர் மத்திய மாகாண சபை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து பின் தொண்டமானின் ஆதரவுடன் முதலமைச்சராக இவர் முயற்சிப்பதனாலேயே இவ்வாறு பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமையவே இவ்வாறு பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஐந்து பிரிகேடியர்களுக்கு மேஜர் ஜெனரல் பதவி

தற்போது பிரிகேடியர் தரத்திலிருக்கும் ஐந்து சிறிலங்கா படை அதிகாரிகள் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட உள்ளனர். மேலும் சில அதிகாரிகளுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட உள்ளன.

பிரிகேடியர்களான எம். யூ. செனவிரத்தினா, ஜானக பெரேரா, வீரசூரிய, அசோகா ஜெயவர்த்தனா, நளின் அங்கமன உட்படபலர் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம சிறிலங்கா இராணுவத்தின் ஆளணி அதிகாரியாகவும் மேஜர் ஜெனரல் றோகான் தழுவத்த அதிரடிப்படையின் வழிநடத்தல் அதிகாரியாகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

கப்படவுள்ளன.

இவ்வாறு 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது, அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வடக்கு-கிழக்கில், யுத்த முனையில் விடுதலைப் புலிகளுடனான சண்டையில் இராணுவம் பெரும் தோல்வியைச் சந்தித்து வருகிறது. இந்தத் தோல்விகளுக்கு இராணுவ உயர் அதிகாரிகள் யுத்த முனையில் நேரடியாக பங்கு பற்றாமையே காரணமாகும். இதனைக் கருத்தில் எடுத்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க களத்தில் நிற்பவர்களுக்கு உயர்பதவி வழங்க முடிவுசெய்துள்ளார்.

யுத்த முனையில் திறமை, வீரசாகசம் காட்டுபவர்களுக்கே பதவி உயர்வில் முதலிடம் வழங்கப்படும் என்று அவர் முடிவு எடுத்துள்ளார். இதனால் பதவி உயர்வு பெற இருந்த எட்டு பிரிகேடியர்களின் பதவி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவர்களின்பெயர்களை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன சிபார்சு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் பல இராணுவ அதிகாரிகளுக்கு உயர் பதவி வழங்கப்படவுள்ளது இது ஏனைய பல இராணுவத்தினருக்குஅதிருப்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ்சேவைக் கால அடிப்படையில் பதவி உயர்வு பெறஇருந்த எட்டு பிரிகேடியர்களும் பதவி உயர்வுகளை இழக்கின்றனர்.

# பெப்ரவரி 4ஆம் திகதிக்குமுன் தாக்குதல் திட்டத்தை சமர்ப்பிக்குக!

### முப்படைத் தளபதிகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் வடபகுதிக்கான புதிய தாக்குதல் திட்டத்தை தீட்டி தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க முப்படைகளின் தளபதிகளையும் கேட்டுள்ளார்.

பெப்ரவரி 4ஆம் திகதிக்குப் பின்னர் வடபகுதிமீதான பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது திண்ணம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனவரி முதலாம் திகதி பதவி ஏற்கவிருக்கும் புதிய இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா, மற்றும் விமானப் படை, கடற்படை அதிகாரிகளிடமே தாக்குதல் திட்டம் குறித்து கேட்கப்பட்டுள்ளது.

# காரைநகர் கடற்படைத் தளத்தை புலிகள் தாக்கலாமென எச்சரிக்கை!

### கடற்படை கப்பல்கள் உஷார் நிலையில்

(கொழும்பு)

காரைநகர் கடற்படை முகாம்மீதும்ஊர்காவற்றுறை மண்டைதீவு இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டுவருவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவல்களையடுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை சமாளிக்கும் விதத்தில் கடற்படையின் பீரங்கிப் படகுகளும் கப்பல்களும் பருத்தித்துறை, காங்கேசன்துறை கடற் பிராந்தியத்தில் தயார் நிலையில், வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாகதேவன்துறை, கடற்படைத்தளத்தை நிர்மூலம் செய்துள்ள விடுதலைப் புலிகளின் அடுத்த குறி காரைநகர் கடற்படைத்தளத்தை தாக்கி அழிப்பதே. இது புலனாய்வுப் பிரிவினர் கொடுத்துள்ள தகவலில் தெரியவந்துள்ளது.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்தில் இருந்து 'வோட்டர்ஜெற்' என அழைக்கப்படும் ஆறுஅதிவேக படகுகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதே ரகத்தைச் சேர்ந்த மேலும் இரண்டு படகுகள் புலிகளிடம் இருக்கின்றன. இவற்றின் உதவியோடு காரைநகர், காங்கேசன் துறை கடற்படையைத்தாக்க கடற்புலிகள் முயற்சிக்கக்கூடுமென பாதுகாப்புஅதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

புலிகளின் தாக்குதலை சமாளிக்கும் விதத்தில் கடற்படையின் பீரங்கிப் படகுகளும்,கப்பல்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும், ஊர்காவற்றுறை தீவிற்குள் இரவு வேளைகளில் புலிகள் ஊடுருவி வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது எனவும், இராணுவ கட்டுப்பாட்டு தீவுகளில் உள்ள படையினர் உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

# ஏழு இ.தொ.கா.உறுப்பினர்களையும் பதவி விலகுமாறு தொண்டா கடிதம்

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் ஏழு இ.தொ,கா உறுப்பினர்களும் ஜனவரி 15 ஆம் திகதிக்குமுன்னர் பதவி விலக வேண்டும் எனவும் கட்சியிலிருந்து வெளியேற வேண்டும்எனவும்இ.தொ கா.தலைவர் தொண்டமான் கடித மூலம் அவ் உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்

''நீங்கள் ஏழு பேரும் இ, தொ.காவின் அனுசரணையுடனேயே வெற்றி பெற்றீர்கள் எனவே இ. தொ. காவின் பணிப்பை ஏற்று பதவி விலகுங்கள்'' என இக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

மேலும் ஹட்டனில் எதிர்வரும் இரண்டாம் திகதி கூடவிருக்கும் இ. தொ. காவின் பொதுச்சபைக் கூட்டத்தில் இவ் ஏழு உறுப்பினர்கள் தொடர்பாக ஆராயப்பட உள்ளதாகவும் மேலும் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவு பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இ தொ.காவின் பலத்தை அதிகரிக்கவும் தனது நடவடிக்கைக்கு ஆதரவு திரட்டவும் தேவையானவற்றை அமைச்சர் தொண்டமான்செய்துவருவதாக இ. தொ.கா வட்டாரங்கள் கூறுகின்றன

கடந்த மூன்று தினங்களாக கண்டி. மாத்தளை, ஹட்டன், நானுஓய, நுவரெலியா பகுதிகளுக்கு அமைச்சர் தொண்டமான் சென்று பலரையும் சந்தித்து ஆதரவு திரட்டியுள்ளார்.

அப்போது சுமார் நாற்றி ஐம்பது ஆண்டுகளாக நாம் பட்ட துன்பங்கள் தீர்ந்து நாம் சந்தோசமாக வாழ வேண்டுமானால் எம்மைக் காட்டிக் கொடுக்கும் இந்த உறுப்பினர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் இவ்வாறு எமது இனத்திற்கும், தோட்டத் தொழிலாளர் நலன்களுக்கும் சாவுமணியடிப்பவர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும்'' என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பதவி நீக்கும் அதிகாரம் தொண்டாவுக்கு இல்லை

### மத்திய மாகாண உறுப்பினர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

''மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து எம்மை நீக்குவதற்கு தொண்டமானுக்கு அதிகாரம் இல்லை அவருடைய பதவி விலக்கல் கடிதத்திற்காக நாம் பதவி விலக வேண்டிய அவசியமும் இல்லை'' என மத்திய மாகாணசபையின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பதவி நீக்கக் கடிதம் கட்சியின் செயலாளரே அனுப்ப வேண்டும் எனவும் தலைவருக்கு அதற்கு அதிகாரம் இல்லை எனவும் மத்திய மாகாண சபையின் இ. தொ.கா உறுப்பினர்கள்கூறியுள்ளனர்.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்குநடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் தப்பிஓடிய படையினர் ஊடுருவல்

### சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பிஓடியவர்களும், சிறு குற்றங்களுக்காக தண்டனைபெற்ற படையினரும், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் தென் பகுதியில் இயங்கிவரும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் ஊடுருவியுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பாதுகாப்பு சேவையை நடத்தும் தனியார் நிறுவனங்கள் பாதுகாப்பு தொடர்பாக விரிவான திட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் அனுமதி இல்லாமல் நடைபெறும் தனிநபர் பாதுகாப்பு சேவை தொடர்பாக மிக அவதானம் செலுத்தவேண்டும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறுவதற்கு தனிநபர் பாதுகாப்பு சேவையை நடத்துபவர்கள் தமது சகல ஊழியர்கள் பற்றிய விபரங்களையும் அமைச்சுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு சகல விபரங்கள் வழங்கப்பட்டால் மட்டுமே இவர்களின் சேவையை பெற்றுக் கொள்ள பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கும் என அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனிநபர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்க வேண்டிய பயிற்சி ஒழுங்கு சேவை மற்றும் அவர்களுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 18பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு

(கொழும்பு)

பதினெட்டு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்

மட்டக்களப்பு பொலிஸ் உயர் அதிகாரி டக்கிளஸ் பீரிஸ் திருக்கோணமலைக்கும், பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி சந்திரா பெரேரா கொழும்பு மத்திய புலனாய்வுத்துறைக்கும், சப்பிரகமுவ மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி ஆனந்த ஹெட்டி ஆராய்ச்சி மட்டக்களப்பிற்கும் இடமாற்றம் செய்யப்படுவார்கள். இவர்களுடன் சேர்த்து 18பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்


### பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரார் வாச் வேக்ஸ் ஸ்தாபனத்தில் திருத்தம் செய்ய கொடுக்கப்பட்ட உங்கள் மணிக்கூடுகளை எனது இல்லத்தில் பெற்றுக்கொள்ளவும் க. பரமேஸ்வரன் 399, கஸ்தூரியார்வீதி யாழ்ப்பாணம். (7021)

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும் ஜாம்புரோட்டினேக்ஸ், பியர் கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டெட் 14 சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8054)

### தாமரைச் செல்வி எழுதிய ''தாகம்''

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு ''தாகம்'' இருக்கத்தான் செய்கின்றது. அந்த தாகம்தான் எத்தனையோ இன்னல்களுக்குமத்தியில் அவர்களை இயக்கிக்கொண்டிருக்கிறது. அருமையான நாவல் ''தாகம்'' படித்துப் பாருங்கள். (6998)

### 'அகிலன்ஸ்'

சகலவிதமான வாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சல்Xகறுப்பு) எழுத்தோவியர் ''அகிலன்ஸ்'' 426, கண்டி வீதி, அரியாலை. (7072)

### தேவை

Barrel இல் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட வட்டத்தகடு தேவை. தொடர்பு கொள்ளவும் இல 6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (7073)


# வடமராட்சி கிழக்கில் மலேரியா தீவிரம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இந்த நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை, அம்மன் மருந்தகம் ஆகியவற்றுக்கு வரும் நோயாளர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் தெரியவருகிறது.

நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதையடுத்து இப்பகுதியில் இந்நோய் தீவிரமாக இருக்கின்றது குறிப்பிடத்தக்கது. (86)

## சித்த ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இரண்டாவது சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, செம்பியன் பற்று உப அலுவலகப் பிரிவில் மாமுனையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.


## வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கு

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வரலாற்று பெருமை மிக்க

**பூநகரிச் சமர்** இடம்பெறும்

**ஒளிவீச்சு** (நவம்பர் 93)

வீடியோ நாடா

**கலை ஊடக இணையத்தில்**

பதிவு செய்து (RECORDING) பெற்றுக்கொள்ளவும்.

(ஒளிவீச்சு நாடா பதிவுசெய்து விநியோகிக்கும் உரிமை கலை ஊடக இணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது கலை ஊடக இணையத்தில் இவ் ஒளிவீச்சை பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும்.

**பதிவுக் கட்டணம் 100/- மட்டுமே**

தொடர்ந்து மாதந்தோறும் வெளியாகும் ஒளிவீச்சை கலை ஊடக இணையத்தில் பதிவுசெய்யலாம்.

கலை ஊடக இணையம்
177, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: கலை ஊடக இணையத்தில் இதுவரை அங்கத்துவம் பெறாதவர்கள் தாமதமின்றி பதிவு செய்து கொள்ளவும்.

(சி-8237)


## நிதி கையளிக்கப்பட்டது

முன்னைநாள் தொண்டர் பயிலுனர் சங்க தலைவர் செ. பரமேஸ்வரன் தமது சங்கத்திடமிருந்த நிதியினை புதிய தொண்டர் ஆசிரியர் சங்க தலைவர் எஸ். நல்லகுமாரிடம் 24-11-93 (புதன்கிழமை) இரு நிர்வாக சபை உறுப்பினர்கள் முன்னிலையில் கையளித்தார். மேலும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்கும்வரை சகல வழிகளிலும் ஒத்துழைப்போம் என உறுதியளித்தார்.


வெளிவந்து விட்டது!

## மனவடு

நெருக்கீட்டின் உள விளைவுகளையும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளையுமிட்டு

உளமருத்துவத் துறைத் தலைவர்
வைத்திய கலாநிதி
க. சோமசுந்தரம் அவர்கள்

எழுதியுள்ள தமிழ் நூல் நிபுணர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுவது. இன்றைய சூழ்நிலையின் பாதிப்புக்களைச் சிறப்பாக ஆய்ந்து விளக்குவது.

**விலை ரூபா 275/-**

தேவைகளுக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகக்கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

- பதிவாளர்

(சி-8228)

வெளிவந்துவிட்டது

ஈழத்து

## தமிழ் நாடக அரங்கு

கிழக்கு பல்கலைக்கழகத்துக் கலை பண்பாட்டுப் பீடாதிபதி

கலாநிதி சி. மௌனகுரு அவர்கள்

எழுதிய நூல். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மலைநாடு ஆகிய பிரதேசங்களுக்குரிய நாடக அரங்கக் கலையின் வரலாற்றைக் கூறுவது.

**விலை ரூபா 120/-**

தேவைகளுக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகக்கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

பதிவாளர்

(சி-8230)

வெளிவந்துவிட்டது

## பூநகரி - தொல்பொருளாய்வு


## 7ம் ஆண்டு நிறைவுநாளில் நினைவு கூருகின்றோம்



**லெப். கிறிஸ்ரி** (சினித்தேவர் பேச்சிமுத்து)

மகனாக 05.05.59 மாவீரனாக 29.12.86

29-12-86-ல் கிளிநொச்சி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இனவெறிப் படையினரை பரந்தனில் இடை நிறுத்தி நடந்த சமரில் வீரச்சாவை தழுவிக்கொண்ட எமது உடன்பிறப்பு லெப். கிறிஸ்ரி அவர்களை இந்நாளில் நினைந்து நிற்கின்றோம்.

உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் தொலைவிடத்து
தொல்படைக்கு அல்லால் அரிது. (குறள்)

என்றும் உங்கள் இலட்சியப் பயணத்தில்

20, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை.

- சகோதரி குடும்பத்தினர்

(7071)

## நினைவுகூருகின்றோம்...

1993-12-29

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி, இரணைமடுக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

அன்சார் (கனகரத்தினம் தெய்வேந்திரராசா - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சல்Xகறுப்பு) எழுத்தோவியர் ''அகிலன்ஸ்'' 426, கண்டி வீதி, அரியாலை. (7072)

---

### தேவை

Barrel இல் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட வட்டத்தகடு தேவை. தொடர்பு கொள்ளவும் இல 6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (7073)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## விஞ்ஞான பீடம்

1992/93 ஆம் கல்வி ஆண்டிற்கு விஞ்ஞான பீடத்தில் பௌதிகவியல் - உயிரியல் கற்கை நெறிகளுக்கு தங்களைப் பதிவு செய்து கொண்ட எல்லா மாணவர்களுக்கும் 1994. 01. 03 ஆம் திகதி தொடக்கம் கணணி விஞ்ஞான ஆரம்ப பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாக உள்ளது. எனவே மேற்படி நெறிகளுக்கு தங்களைப் பதிவுசெய்து கொண்ட சகலரும் 1994.01.03ஆம் திகதி வகுப்புகளுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

முதலாம் வருடத்தில் கணணி விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்க விரும்புபவர்களது தெரிவு இந்த ஆரம்ப கணணிவிஞ்ஞான வகுப்புக்களின் முடிவில் நடைபெறவிருக்கும் தகுதிகாண் பரீட்சையில் இருந்தே செய்யப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

-பதிவாளர்.

(சி-8236)

---

கலை ஊடக இணையம்
177, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: கலை ஊடக இணையத்தில் இதுவரை அங்கத்துவம் பெறாதவர்கள் தாமதமின்றி பதிவு செய்து கொள்ளவும்,

(சி-8237)

---

## நிதி கையளிக்கப்பட்டது

முன்னைநாள் தொண்டர் பயிலுனர் சங்க தலைவர் செ. பரமேஸ்வரன் தமது சங்கத்திடமிருந்த நிதியினை புதிய தொண்டர் ஆசிரியர் சங்க தலைவர் எஸ். நல்லகுமாரிடம் 24-11-93 (புதன்கிழமை) இரு நிர்வாக சபை உறுப்பினர்கள் முன்னிலையில் கையளித்தார். மேலும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்கும்வரை சகல வழிகளிலும் ஒத்துழைப்போம் என உறுதியளித்தார்.

தகவல்:
S. V. தயாநிதி (ஆசிரியர்)
(கீரிமலை நகுலேஸ்வர ம வி.)

(7059)

---

## வெற்றிடங்கள்

தொடங்கப்படவுள்ள நிதிநிறுவனமொன்றிற்கு, அமர்த்தப்படுவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கீழ்க்காணும் தொழில் நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில் நிலைகள்:**

1) முகாமையாளர்
2) அலுவலர்
3) எழுதுநர்

**விண்ணப்ப முடிவு நாள்: 05-01-1994**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி -

விளம்பர இல. 304
மே/பா ஈழநாதம்,
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தொழில் நிலையின் பெயரையும், விளம்பர இலக்கத்தையும் குறிப்பிடவும்.

★ ஓய்வுபெற்ற வங்கியாளர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

(சி-8211)

---

## சிவா சிகை அலங்கரிப்பு நிலையம்

தமிழீழத்தில் நவீனமுறையில் சிறியோர் முதல் பெரியோர் வரை ஆண், பெண் இருபாலாருக்கும் சிறந்த முறையில் சிகை அலங்காரம் செய்யப்படும். புதுவருடத்தை முன்னிட்டு 29-12-93 புதன் (இன்று) விசேடமாகக் கடை திறக்கப்படும். வழமையான நேரம் காலை 7.00 - மாலை 8 00 மணிவரை திறந்திருக்கும்.

ப. சிவா
393, பிரதான வீதி,
சுண்டிக்குளி.

(7068)

---

களப்பு, முல்லைத்தீவு, மலைநாடு ஆகிய பிரதேசங்களுக்குரிய நாடக அரங்கக் கலையின் வரலாற்றைக் கூறுவது.

**விலை ரூபா 120/-**

தேவைகளுக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகக்கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

பதிவாளர்

(சி-8230)

---

## வெளிவந்துவிட்டது

## பூநகரி - தொல்பொருளாய்வு

வரலாற்றுத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர்
**பரமு புஷ்பரட்ணம் அவர்கள்**

எழுதிய நூல். ஆதிகாலந்தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையுள்ள பூநகரியின் நீண்டகால வரலாற்றைத் தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் விளக்குவது. அண்மைக் காலத்திற் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களின் நூற்றுக்கணக்கான நிழற்படங்களுடன் கூடியது.

**விலை ரூபா : 450/-**

தேவைகளுக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகக்கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

- பதிவாளர்.

(சி-8231)

---

Now Available for Sale-

## *A DICTIONARY ON ENVIRONMENT*

A work which brings together scattered information on Environmental Studies

by

*Navamany Selvarajah*
*Associate Professor, Department of Zoology, University of Jaffna*

**Price: Rs. 160/-**

Please contact;

**Assistant Registrar, Administration, University of Jaffna, Thirunelvely.** for your requirements.

**- Registrar**

(சி-8232)

---

தொல்படைக்கு அல்லால் அரிது. (குறள்)

என்றும் உங்கள் இலட்சியப் பயணத்தில்

20, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை. - சகோதரி குடும்பத்தினர்

(7071)

---

## நினைவுகூருகின்றோம்…

**1993-12-29**

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி, இரணைமடுக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

**அன்சார்** (கனகரத்தினம் தெய்வேந்திரராசா - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

திருமலை - கோபாலபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 03 குழந்தைகள், 2 பெண்கள் மற்றும் ஒரு கர்ப்பிணிப்பெண்.

1986ஆம் ஆண்டு பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். கிறிஸ்ரி** (சீனித்தேவர் பேச்சிமுத்து - வண்ணார்பண்ணை - யாழ்)

**ஜக்சன்** (சிவபுண்ணியம் ஜெயச்சந்திரன் - வதிரி, கரவெட்டி வடக்கு - யாழ்)

1988ஆம் ஆண்டு மட்டு - சேனையூர்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ரவி** (வடிவேல் நாகேஸ்வரன் - சேனையூர் - மட்டு)

யாழ் - சுன்னாகத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மூதாட்டி.

1991ஆம் ஆண்டு திருமலை - கல்விமுத்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அருணன்-செல்டன்** (கணபதிப்பிள்ளை பால்ராஜ் - திருமலை)

**புகழேந்தி-கலீல்** (ஜோஜ் நிக்சன்- சீனன்குடா - திருமலை)

**சிவமணி-தியாகு** (வேலாயுதம் ரவிச்சந்திரன்- மூதூர்-திருமலை)

**அறிவழகன்-தீசன்** (இராசரட்ணம் சத்தியமோகன் - புல்மோட்டை - திருமலை)

மட்டு - கொக்குவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கிய போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கௌரி** ( — கருவேப்பங்கேணி, மாமங்கம்-மட்டு)

1992ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**2-ம் லெப். அமலன்** (அருளானந்தம் லிங்கதாசன் - யாழ்வீதி - மானிப்பாய்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8233)

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

வாசலில் ஆராய்ச்சிக்கு அனுமதி மறுத்தால்
சாளரம் வழியாக சந்தேகம் உள்ளே புகும்

— பெஞ்சமின் ஜோவெல்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

# சிறிலங்காவின் நீதியில் ராணுவத்திற்கு சந்தேகம்!

சிறிலங்கா இராணுவத்தரப்பு மேற்கொள்ளும் விசாரணைகள், அவற்றின் திர்ப்புக்கள் தொடர்பாக இராணுவத்தினரின் ஒரு பகுதியினருக்கு தற்பொழுது சந்தேகம் எழுந்துள்ளது. இச்சந்தேகங்களுக்கு விசாரணையின் முடிவுகள் வெளி அழுத்தங்கள், செல்வாக்குகளின் பாதிப்புக்கள் இன்றி வெளி வருமா என்பது குறித்து உள்ள ஐயப்பாடுகளே காரணங்களாகத் தெரிவிக்கப் படுகின்றன.

இவ்வாறான ஐயப்பாட்டிற்கு கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கமோ, அன்றி இராணுவமோ, நியமித்த விசாரணைக் கமிசன்கள் நடந்து கொண்ட முறைகளும், அவற்றின் திர்ப்புகளுமே காரணமாகும். இந்த வகையில் கடந்த ஆண்டில் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்ட போது நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தொடர்பாக, கொப்பேகடுவவின் மனைவியே பலத்த சந்தேகத்தை எழுப்பினார். சர்வதேச விசாரணைக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தார். இது அரசியல் நோக்கம் கொண்டது என்பது மற்றொரு விடயமாகும்.

இதைத் தொடர்ந்து தற்பொழுது பூநகரி இராணுவ முகாம் தகர்ப்புத் தொடர்பான விசாரணை சிங்களவர்கள் மத்தியில், குறிப்பாக இராணுவ அதிகாரிகள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அதாவது தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகும் இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட விசாரணக்குழு தோல்விக்கான காரணத்தை முழுமையாக வெளிக் கொண்டு வருமா என்பதே அவர்களின் சந்தேகமாகும்.

இராணுவத் தரப்பில் ஒரு பகுதியினர் இவ்வாறு சந்தேகம் கொண்டுள்ளதில் நியாயங்கள் இல்லாமல் இல்லை. ஏனெனில், பதவி விலகிச் செல்லும் இராணுவத் தளபதி நியமித்த விசாரணைக் குழுவினர் இராணுவத் தளபதிக்கு விசுவாசமின்றிச் செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாததுதான். இந்நிலையில், விசாரணையில் முழுமையான நம்பிக்கைத் தன்மை என்பது கேள்விக்குரியதொன்றே.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ, அன்றி இராணுவத் தரப்போ இவ்வாறான விசாரணைக் கமிசன்களை

# போரில் வெல்லும் எண்ணம் ஐ. தே. கட்சிக்கு கிடையாது

**சு. க. எம். பி. தெரிவிப்பு**

(கொழும்பு)

யுத்தத்தை வெல்லும்நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது. அடுத்த தேர்தல்களில் வெல்வதையே தனது முக்கிய நோக்கமாகக் கருதி ஐக்கிய தேசியக் கட்சி செயல்படுகின்றது. இன்று சிங்கள மக்களுக்கு தேவைப் படுவது யுத்தத்தில் வெற்றி மட்டும் என களுத்துறை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக சுதந்திரக் கட்சிகொண்டுள்ள முக்கியத்துவம் கூட ஆளும் கட்சி இடையே இல்லாமை கவலைக்கு உரியதாகும். நாட்டை யுத்த பிரகடனம் செய்ய வேண்டும் என திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்து சிங்கள மக்களின் இன்றைய முக்கிய கோரிக்கைகளின் ஒன்றாக அமைந்துள்ளது. இவற்றை தேர்தலை நோக்காகக்கொண்டு ஒத்திவைக்க முடியாது. என வே உடனடியாக அமுல்படுத்த அரசாங்கம்தயாராக வேண்டும். இக் கோரிக்கை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருமாயின் மண்கிண்டிமலை, பூநகரி போன்று இன்னும் பாரிய அழிவுகளை சிங்கள இனம் எதிர்கொள்ளவேண்டி வரும். இது தவிர்க்க முடியாத சம்பவமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# யாழ். ஆஸ்பத்திரி வளவில் குப்பைகளினால்துர்நாற்றம்

யாழ். போதனா மருத்துவமனையின் உட்பகுதி நிலங்கள் புல் பூண்டுகள் வளர்ந்தும் உடைந்த சிற்துண்டுகள் குவிக்கப்பட்டும் சுகாதாரத்திற்கு பெரும் பங்கம் மேற்படும் நிலையில் உள்ளதால் அங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து நோயாளிகளுக்கு பெரும் அசௌகரியம் மேற்பட்டுள்ளது.

மேற்படி மருத்துவமனையின் உட்பகுதியில் உள்ள தரிசு நிலங்களில் ஒரு பகுதி மருத்துவமனைக்கு புதிதாக கட்டப்பட்டு குறையாக உள்ள கட்டடத்தின் பின் பகுதியே பெருமளவில் குப்பை கூழங்கள் நிரம்பி வழியும் இடமாகும் இங்கு மழை நீர் தேங்கி பல காலமாக அகற்றப்படாது கிடக்கும் குப்பைகளுடன் சேர்ந்து அங்கு ஓரே துர்நாற்றமும் வீசுகின்றது.

முன்பு இக்கட்டடமும் அதை அண்டிய நிலமும் தனியார் கட்டட ஒப்பந்தகாரரின் மேற்பார்வையில் இருந்ததாகவும் குடா நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை தொடங்கிய காலம்முதல் அப் பகுதி எந்தவித பராமரிப்பு மற்று கிடந்ததாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க கடந்த வாரம் இவ் ஒப்பந்தகாரர் தனது பொருள்கள் யாவற்றையும் அப்புறப்படுத்தி மேற்படி பகுதியில் இருந்து தனது செயற்பாட்டை நிறுத்திவிட்டதாக தெரியவருகின்றது. இதையடுத்து இனியாவது இப்பகுதி துப்புரவாக்கப்பட்டு சுகாதாரம் பேண மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா என எதிர்பார்க்கப்படுகிறது.

# வைத்தியசாலையில் குடிநீர் பெறமுடியாமல் அவதி

(வடமராட்சி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் தங்கி வரும் நோயாளிகள் குடிநீரைப்பெற பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

அங்குள்ள குழாய்களில் குடிநீர் இல்லாததனால் நோயாளிகள் ஆழமான கிணற்றில் இருந்து கஷ்ட நிலையில் நீரைப் பெற முடிகிறது.

இவ் வைத்தியசாலையில் இருந்து வந்த 'ஜெனரேட்டர்' பழுதடைந்து போனதனாலேயே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. குழாய்களில் குடிநீர் இல்லாததனால் மலசல கூடங்களும் அடைக்கப்பட்டு மேலும் நோயை உண்டு பண்ணலாமெனவும் அறிய முடிகிறது. (யோ)

# சேதமடைந்த குடிசைகள் மீண்டும் புனரமைப்பு

# வரைபடங்கள் தயாரிக்க வெளிநாட்டு வரைஞர்கள்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் நகர்வுத் திட்டங்கள் விடுதலைப் புலிகளுக்கு முன்னரேயே தெரிய வந்து விடுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. சிறிலங்கா இராணுவத்தின் வலயங்கள், நகர்வுத் திட்டங்கள் பற்றிய வரைபடங்கள் பலவும் முன் கூட்டியே தெரிய வந்து விடுவதாகவும், இதனைத் தடுக்கும் வகையில் மாற்று நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டுமெனவும் எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளது.

காணி அமைச்சினால் மிகவும் இரகசியமான முறையில் தயாரிக்கப்படும் இப்படங்கள் விடுதலைப் புலிகளுக்குக் கிடைப்பதைத் தடுக்கும்வகையில் இனிமேல் இவை வெளிநாட்டு வரைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதற்கு ஆலோசிக்கப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. பாதுகாப்பு அமைச்சின் இக் கோரிக்கையை நிறைவேற்றுவது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# மாணவர்களின் கல்வி வளர்ச்சியே கல்லூரியின் உயர்வுக்கு காரணம்

**- கல்விப் பணிப்பாளர்**

(வடமராட்சி)

மாணவர்களின் கல்வி வளர்ச்சிதான் அந்தக் கல்லூரியின் தரம் உயர்வுக்கு மூல காரணம். அந்த வகையிலே ஹாட்லிக் கல்லூரியின் தரம் உயர்வுக்கு இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சி பிரகாசத்தைஏற்படுத்தியிருக்கிறது

இவ்வாறு 1993 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத் துறையில் அதிவிசேடசித்தி (4ஏ)பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் அகில இலங்கை ரீதியில் ஆறாவது இடத்தையும் பெற்ற மாணவன் செல்வன் ஜெகதீசன் ஜெகச்செல்வனுக்கு ஞான சம்பந்தர் கலைமன்றத்தில் மன்றத் தலைவர் திரு. கு. அழகரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராட்டு விழாவின் போது யாழ். வடக்கு பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு கே. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆற்றிய பாராட்டுரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, கல்வி நிலையில் குருவுக்கும் மாணவனுக்கும் இடையில் நல்ல உறவு நிலையில் உருவாகவேண்டும், குரு பக்தி பாடசாலைகளில் அவசியம், மாணவன் குருவை மதிப்பதும், குரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதும்இந்த உறவு நிலை ஓர் இணைப்புப் பாலமாக அமையும்.

தமிழினத்தின் பாரம்பரிய சொத்து கல்வி. எதை அழிக்

கல்வி வளர்ச்சி உயர்வடையும்.

ஹாட்லிக் கல்லூரி இது வரையில் பல அறிஞர்களை மேதைகளை, விஞ்ஞானிகளை, நிபுணர்களை, பட்டதாரிகளை, வைத்திய அதிகாரிகளை, பொறியியலாளர்களை உருவாக்கித் தந்திருக்கிறது இந்தப் பெருமை இந்தக் கல்லூரிக்கே உண்டு யாழ். மாவட்டத்திலே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் அதிக கவனத்தைக் கொண்டவர்கள். ஆதலால்தான் யாழ். மாவட்டம் கல்வியில் ஒரு தனிரகம் காண்கிறது.

பரீட்சைக்குரிய மதிப்பை எமது சமுதாயம் கொடுக்க வேண்டும். குரு இல்லாமல் கல்வி இல்லை. குருவின்உதவி இல்லாமல் உண்மையான கல்வியைப் பெறமுடியாது. இங்கே சிறப்புப் பெறுபேறு பெற்ற மாணவனையும் அவரது கல்விக்கு உதவியாக இருந்த ஆசிரியர், அதிபரையும் ஒன்றாகக் காணும்போது எனது மனம் பூரிப்படைகிறது. இவர் போன்று பல மாணவர்கள் இங்கே உருவாக வேண்டும். ஞான சம்பந்தர் கலைமன்றம் இவருக்கு எடுத்த பணி சிறந்தது. இந்த மன்றத்திற்கு மாணவர் சமுதாயம் தொடர்ந்து மதிப்பளிக்க வேண்டும்.

யாழ் மாவட்ட ஆசிரியர்கள் கல்வியில் நம்பிக்கை உள்ளவர்கள். அவர்களின் தியாகத்தினால் கிடைக்க வெற்

லியை சீரழிக்க நாம் அனுமதிக்கக் கூடாது ஆசிரியர்களிடம் மாணவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். மாணவர்கள் கல்வியில் ஆசிரியர்கள் அக்கறை செலுத்த வேண்டும் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை அதிபர், ஆசிரியர்களிடம் கேட்டு நிவர்த்தி செய்ய செய்ய வேண்டும். அப்போதுதான் கல்விவளர்ச்சிபெறும்.

இந்த மாணவன் மேலும் தன் கல்வியினால் உயர்வடைந்து கல்வியை பெற்ற மண்ணுக்குத் தன்னுடைய சேவையைப் பிரதிபலிப்பாக ஆற்ற வேண்டும். நமது மண்ணுக்கு இவர் சேவை செய்து மண்ணை வளர்க்க உழைக்க வேண்டும் என்றார்.

மற்றும் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா அவர்களின் ஆசியுரையைத் தொடர்ந்து யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. செ. சுவாமிநாதன், பருத்தித் துறைப் பிரதேசச் செயலர் திரு. ஆ. சிவசாமி, கரவெட்டி பிரதேசச் செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன், ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. கே. நடராசா, முன்னாள் அதிபர் திரு. பொன். பாலசிங்கம், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி இ. நந்தகுமார், வர்த்தகத்துறை ஆசிரியர் திரு. எல். பி. ஞானப்பிரகாசம் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கினர்.

சந்தேகத்தை எழுப்பினார். சர்வதேச விசாரணைக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தார். இது அரசியல் நோக்கம் கொண்டது என்பது மற்றொரு விடயமாகும்.

இதைத் தொடர்ந்து தற்பொழுது பூநகரி இராணுவ முகாம் தகர்ப்புத் தொடர்பான விசாரணை சிங்களவர்கள் மத்தியில், குறிப்பாக இராணுவ அதிகாரிகள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அதாவது தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகும் இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தோல்விக்கான காரணத்தை முழுமையாக வெளிக் கொண்டு வருமா என்பதே அவர்களின் சந்தேகமாகும்.

இராணுவத் தரப்பில் ஒரு பகுதியினர் இவ்வாறு சந்தேகம் கொண்டுள்ளதில் நியாயங்கள் இல்லாமல் இல்லை. ஏனெனில், பதவி விலகிச் செல்லும் இராணுவத் தளபதி நியமித்த விசாரணைக் குழுவினர் இராணுவத் தளபதிக்கு விசுவாசமின்றிச் செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாததுதான். இந்நிலையில், விசாரணையில் முழுமையான நம்பிக்கைத் தன்மை என்பது கேள்விக்குரியதொன்றே.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ, அன்றி இராணுவத் தரப்போ இவ்வாறான விசாரணைக் கமிசன்களை நியமிப்பது ஒன்றும் புதியதொன்றல்ல. அதாவது, குற்றவாளிகளே நீதிபதிகள் ஸ்தானத்தில் பணியாற்றுவது இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஒன்றே ஆகும்.

1977 இல் சன்சோனிக் விசாரணைக் கமிசனில் இருந்து, பின்னர், இடம் பெற்ற சில இனப்படு கொலைகள், மற்றும் தாக்குதல்கள் குறித்தும் சிறிலங்காஅரசும், இராணுவமும் பலவிசாரணைக் கமிசன்களை நியமித்திருந்தன. இவற்றில் பலவற்றின் விசாரணை முடிவுகள் பக்கச்சார்பானவையாகவும், அரசிற்கும், இராணுவத்திற்கும், சார்பாகவும், அவர்களை காப்பாற்றுபவையாகவும் இருந்தன. சிலவற்றின் விசாரணையின் முடிவுகளுக்கு என்ன நடந்ததென்பதே தெரியாமல் போனது.

இதன் காரணமாக இவ்விசாரணைக் கமிசன்களின் விசாரணைகளும், தீர்ப்புக்களும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குபவையாகவோ அன்றி, இழப்பீடு வழங்குபவையாகவோ இருக்கவில்லை. அதே வேளை, தமிழ் மக்கள் இவை தொடர்பாக எழுப்பிய ஆட்சேபனைகளையும் சிறிலங்கா அரசோ, இராணுவமோ பொருட்படுத்தியதாகவும் இருக்கவில்லை-

மாறாக, தனது விசாரணை அறிக்கைகளையே உலகிற்கு காட்டி சிறிலங்கா அரசு தனது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டது. அதாவது விசாரணை என்ற பெயரில், எதிரியே நீதிபதியாகி குற்றங்களுக்கு விளக்கம் கூறிக்கொண்டிருந்தனர். தமிழ் மக்களின் நியாய பூர்வமான ஆட்சேபனைகள் எவையும் உலகில் எவர் காதிலும் சென்றடைந்ததாக இல்லை.

இந்நிலையில், தற்பொழுது இராணுவ விசாரணைக் குழுவின் விசாரணையில் இராணுவத் தரப்பே சந்தேகம் கொள்ளும் நிலைஉருவாகியுள்ளது. ஆனால், இதற்காக இன்று ஆத்திரப்படும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் தாம் கடந்த காலத்தில் நிகழ்த்தி வந்த 'சாம்ராய்ச்சியத்தைப்' பற்றி மறந்தவர்கள் என்றே கொள்ளவேண்டும்.

ஆனால், இராணுவ அதிகாரிகள் இன்று எழுப்பியுள்ள சந்தேகமானது கடந்த காலத்தில் சிறிலங்கா இராணுவமும், அரசாங்கமும் மேற்கொண்ட விசாரணைகளின் 'லட்சணத்தை' உலகிற்கு வெளிப்படுத்துவதற்குப் போதுமானவையாகும். இதனை உலகம், குறிப்பாக சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். ஏனெனில் சிறிலங்காவின் விசாரணைக்குழு அறிக்கைகளைக் கொண்டு அவற்றிற்கு தொடர்ந்தும் நிதி உதவிகளை இந்நாடுகள் புரிந்து வருகின்றமையினால் ஆகும்.

---

குப்பை கூழங்கள் நிரம்பி வழியும் இடமாகும் இங்கு மழை நீர் தேங்கி பல காலமாக அகற்றப்படாது கிடக்கும் குப்பைகளுடன் சேர்ந்து அங்கு ஒரே துர்நாற்றமும் வீசுகின்றது. இதையடுத்து இனியாவது இப்பகுதி துப்புரவாக்கப்பட்டு சுகாதாரம் பேண மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா என எதிர்பார்க்கப்படுகிறது.

## வைத்தியசாலையில் குடிநீர் பெறமுடியாமல் அவதி

(வடமராட்சி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் தங்கி வரும் நோயாளிகள் குடிநீரைப்பெற பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

அங்குள்ள குழாய்களில் குடிநீர் இல்லாததனால் நோயாளிகள் ஆழமான கிணற்றில் இருந்து கஷ்ட நிலையில் நீரைப் பெற முடிகிறது.

இவ் வைத்தியசாலையில் இருந்து வந்த 'ஜெனரேட்டர்' பழுதடைந்து போனதனாலேயே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. குழாய்களில் குடிநீர் இல்லாததனால் மலசல கூடங்களும் அடைக்கப்பட்டு மேலும் நோயை உண்டுபண்ணலாமெனவும் அறிய முடிகிறது. (யோ)

## சேதமடைந்த குடிசைகள் மீண்டும் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

அகதிமுகாம்களுள் வெள்ளம் புகுந்ததில் சேதமடைந்த குடிசைகள் மற்றும் மலசல கூடங்கள் என்பன மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டு வருவதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்தது.

மேற்படி முகாம்கள் உள்ள பிரதேசத்தின் பிரதேச செயலராலும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளாலும் இத்திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது

---

வன் செல்வன் ஜெகந்தசன ஜெகச்செல்வனுக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் மன்றத் தலைவர் திரு. கு. அழகரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராட்டு விழாவின் போது யாழ். வடக்கு பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு கே. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆற்றிய பாராட்டுரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, கல்வி நிலையில் குருவுக்கும் மாணவனுக்கும் இடையில் நல்ல உறவு நிலையில் உருவாகவேண்டும், குருபக்தி பாடசாலைகளில் அவசியம். மாணவன் குருவை மதிப்பதும், குரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதும்இந்த உறவு நிலை ஓர் இணைப்புப் பாலமாக அமையும்.

தமிழினத்தின் பாரம்பரிய சொத்து கல்வி. எதை அழித்தாலும் யாழ். மாணவர்களின் கல்வியை அழிக்க முடியாது ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக இருப்பது அடிப்படைக் கல்வி அடிப்படைக் கல்வி முறையில் அத்திவாரமாக அமையும்போது

கள். ஆதலால்தான் யாழ். மாவட்டம் கல்வியில் ஒரு தனிரகம் காண்கிறது.

பரீட்சைக்குரிய மதிப்பை எமது சமுதாயம் கொடுக்க வேண்டும். குரு இல்லாமல் கல்வி இல்லை. குருவின்உதவி இல்லாமல் உண்மையான கல்வியைப் பெறமுடியாது. இங்கே சிறப்புப் பெறுபேறு பெற்ற மாணவனையும் அவரது கல்விக்கு உதவியாக இருந்த ஆசிரியர், அதிபரையும் ஒன்றாகக் காணும்போது எனது மனம் பூரிப்படைகிறது. இவர் போன்று பல மாணவர்கள் இங்கே உருவாக வேண்டும். ஞானசம்பந்தர் கலைமன்றம் இவருக்கு எடுத்த பணி சிறந்தது. இந்த மன்றத்திற்கு மாணவர் சமுதாயம் தொடர்ந்து மதிப்பளிக்க வேண்டும்.

யாழ் மாவட்ட ஆசிரியர்கள் கல்வியில் நம்பிக்கை உள்ளவர்கள். அவர்களின் தியாகத்தினால் கிடைத்த வெற்றியே இவைகள். எமது கல்

சேவையைப் பிரதிபலிப்பாக ஆற்ற வேண்டும். நமது மண்ணுக்கு இவர் சேவை செய்து மண்ணை வளர்க்க உழைக்க வேண்டும் என்றார்.

மற்றும் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்களின் ஆசியுரையைத் தொடர்ந்து யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. செ. சுவாமிநாதன், பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் திரு.ஆ. சிவசாமி, கரவெட்டி பிரதேசச் செயலர் திரு.செ. ஸ்ரீநிவாசன், ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. கே. நடராசா, முன்னாள் அதிபர் திரு. பொன். பாலசிங்கம், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி இ. நந்தகுமார், வர்த்தகத்துறை ஆசிரியர் திரு. எல். பி. ஞானப்பிரகாசம் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கினர்.

(யோ)

## புத்தளத்தில் 30 தமிழர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் முப்பது தமிழர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் புத்தளம் மாவட்டத்தினுள் ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

புத்தளம், கற்பிட்டி, இலவன்குளம் முதல் மன்னார் வரையிலான இடங்களில் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் ஊடுருவியிருப்பதாகவும், இப்பகுதியிலுள்ள சிங்களவர் மற்றும் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பு குறித்த தகவல்களைத் திரட்ட இவர்கள் முயற்சித்ததாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## சீக்கிய இளைஞர்களுக்கு பாகிஸ்தானில் பயிற்சி

### -பஞ்சாப் மாநில பொலிஸ் ஆணையாளர்

(டில்லி)

பாகிஸ்தானின் முப்படைகள் உளவு சேவை அமைப்பு வெளிநாடுகளிலிருந்து சீக்கிய இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு சீர்குலைவு நடவடிக்கைகளில் பயிற்சிஅளித்து வருவதாக பஞ்சாப் மாநில பொலிஸ் டைரக்டர் ஜெனரல் கே. பி. எஸ். கில் கூறியுள்ளார்.

எல்லை நகரமான தேராபாபக் நானாவில் விளையாட்டு நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட அவர் பின்பு செய்தியாளர்களிடம்பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது, உரிய பாஸ்போட்டுகள் இல்லாமல் வெளிநாடுகளுக்கு குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் சீக்கிய சிறுவர்களுக்கு ஆசைகாட்டி பாகிஸ்தான் தனது வலையில் சிக்க வைத்து விடுவதாகவும் தெரிவித்தார்.

சீக்கிய இளைஞர்களுக்கு நிதிவசதியும் பயிற்சி வசதியும் அளிப்பதன் மூலம் பஞ்சாப் மாநிலத்திலும், இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் சீர்குலைவு நடவடிக்கைகள் இடம்பெற பாகிஸ்தான் தூண்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாவ் விளையாட்டுவிழாவில் இந்தியாவுக்கு 149 பதக்கம்

(டாக்கா)

தெற்காசிய பெடரேசனின் ஆறாவது விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் டாக்காவில் நிறைவுபெற்றது. ஏழு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொண்ட இவ்விளையாட்டு விழாவில் 61 தங்கப் பதக்கங்களையும், 47 வெள்ளிப் பதக்கங்களையும், 41 வெண்கலப்பதக்கங்களையும்பெற்று இந்தியா பதக்கப்பட்டியலில் முன்னணியில் உள்ளது.

23 தங்கப் பதக்கங்களோடு பாகிஸ்தான் இரண்டாவது இடத்தையும், 21 தங்கப் பதக்கங்களுடன் சிறிலங்கா மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. அடுத்த சாவ் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெற இருப்பது தெரிந்ததே.

முடிவுநாள் வைபவத்தின் போது இந்த விளையாட்டுப் போட்டியின் சின்னமான புலிக்குட்டி விளையாட்டு வீரர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிய காட்சி கூடியிருந்த பல்லாயிரக்கணக்கானோரை நெகிழச்செய்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சுரங்கம் இடிந்து இருவர் பலி

(சென்னை)

சேலத்தையடுத்துள்ள சூலமங்கலம் பகுதியில் தனியாருக்கு சொந்தமான சுரங்கமொன்று இடிந்து வீழ்ந்ததில் இருவர் கொல்லப்பட்டனர் ஒருவர் காயமடைந்தார்.

## கடத்தல் பொருள்கள் சிக்கின

(சென்னை)

சிங்கப்பூரிலிருந்து சென்னை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த சரக்குப் பெட்டியொன்றிலிருந்து, ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய கடத்தல் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கம்பியூட்டர் சாதனங்கள், மருந்துப்பொருள்கள் போன்றவை இவற்றுள் அடங்கும்.

## இஸ்ரேலியர் சூடு ஐ. நா. படை பலி

(டெல் அவிவ்)

தென் லெபனானில் இஸ்ரேலிய இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் நோர்வே நாட்டைச் சேர்ந்த ஐ நா. அமைதிப்படையின்இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தற்செயலாகவே நடைபெற்றதாக இஸ்ரேலிய அரசு கூறியுள்ளது. இச்சம்பவம் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் தெரிவித்து இருக்கின்றது.

## கணித மூலவள நிலையம் திறந்து வைக்க ஏற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சிகிழக்கில் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கணித மூலவள நிலையம் திறந்துவைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஜனவரி முதலாம் திகதி காலை 10.00 மணியளவில் இந்நிலையம் திறந்து வைக்கப்படும் பாடசாலை அதிபர் திரு மு.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் திருமதி நகுலேஸ்வரி நகுலராசா ஞாபகார்த்தமாக இந்தநிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவில் யாழ் வடக்கு பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி பிரதமவிருந்தினராக கலந்து கொள்கிறார். (36) (யோ)

## மடுமுகாம் மக்களுக்கு உணவு அனுப்ப மறுப்பு

### புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவிப்பு

மடுப் பகுதியிலுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை அனுப்பி வைக்க சிறிலங்கா அரசின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மடுப்பகுதியிலுள்ள திறந்த வெளி அகதிமுகாம் இராணுவக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிரதேசத்தில் இருப்பதால் அங்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க முடியாது என்று சிறிலங்காவின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஏற்கனவே கூறியுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் ஒரேயொரு தடவை மட்டுமே அங்கு நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்தப் பகுதியில் முப்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு கிராமங்கள்

# படையினரால் சுற்றிவளைப்பு
# பொதுமக்கள் பெருமளவில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு உன்னிச்சை முகாம் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் சேர்ந்து பாவற்கொடிச்சேனை, காந்திநகர், சின்னச்சிற்பிமடு ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்து ஆறு பொது மக்களை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றனர்.

கடந்த 24ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் கைதானவர்களின் பெயர், விபரங்கள் வருமாறு;

சிற்பிமடுவைச் சேர்ந்த இராசையா அழகையா (45) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையும், நாகமணி அரியநாயகம் (22) என்பவரும் பொன்னம்பலம் தங்கராசா (32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், கணபதிப்பிள்ளை இராஜன் (25) என்பவரும் காந்திநகரைச் சேர்ந்த கார்த்கேசு மயில்வாகனம் (21) என்ற திருமணமானவரும் முனைக்காட்டைச் சேர்ந்த லிங்கநாதன் (39) என்பவருமே கைதாகியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கடந்த 25ஆம் திகதி இரவு 8-00 மணியளவில் பாலையடி வெட்டை இராணுவத்தினர் பலாச்சோலைகிராமத்தினுள் சென்று ஒரு வீட்டைச் சுற்றி வளைத்து பொது மகன் ஒருவரை கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர்.

எட்டுப்பிள்ளைகளின் தந்தையான அழகையா என்பவரே (46) கைது செய்யப்பட்டவர். இவர் மாவடிமுன்மாரி கூளாவடியைச் சேர்ந்தவர்.

மறுநாள் 26ஆம் திகதி காலை 5-30 மணியளவில் இராணுவத்தினர் அதே கிராமத்தை சுற்றிவளைத்து கண்ணகை மகேந்திரன் (22) என்ற 35ஆம் கிராமத்தைச் சேர்ந்தவரை கைது செய்து கொண்டுசென்றனர்,

இதே தினம் காலை கண்ணகி இராணுவத்தினர் நெடுஞ்சோலையில் வைத்து பெரிய தம்பிபேரின்பம் (23), வாதக்கல்மடு நெடுஞ்சேனை விகாமி இளையதம்பி (20) நெடுஞ்சேனை என்பவர்களை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றனர்.


வல்வை கல்வி அபிவிருத்திச் சங்கம் (VEDA)

நடத்துகின்ற மாதாந்த கல்விக் கருத்தரங்கின்

## ஆரம்ப வைபவ அழைப்பு

இடம் - வல்வை அமெரிக்கன் மிஷன் கல்லூரி மண்டபம்.

காலம் - 29-12-93 புதன் (இன்று) பி. ப. 2 00 மணி

சிறப்புரை - திரு. S. செல்வரட்ணம் அவர்கள் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி கோட்டம்)

கருத்துரைகள் :

- சமூக மருத்துவம் :
  வைத்திய கலாநிதி M. K. முருகானந்தன்
  ''ஆங்கில மருந்து வகைகளின் ஆலோசனையற்ற பயன்பாட்டின் ஆபத்தான விளைவுகள்''
- விஞ்ஞானம்
  திரு. V S. குணசீலன் (விஞ்ஞான விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)
  ''இயற்கைச் சமநிலையில் மனிதனின் தலையீடு''
- உளவியல்
  திரு. N. குகதாஸன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)
  ''பரீட்சைகளை எதிர்கொள்வது எப்படி''

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(7070) செயலாளர்



ஜோ. எகட்டனின்


### பணப்பை களவு

யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பகுதியில் வைத்து இரு பெண்களின் பணப்பைகள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த 27ஆம் திகதி வழமைக்கு மாறாக வெளிநோயாளர் பகுதியில் அதிகமானோர் சிகிச்சை பெற வந்த வேளையே இத்திருட்டு நடந்துள்ளதாக தெரியவருகின்றது. மூளாயைச்சேர்ந்தபத்மலோஜினி, தருமராசா சிவசோதி ஆகிய இருவருமே தமது அடையாள அட்டை, பணம்என்பவற்றை மணிபேசுடன் பறிகொடுத்தவர்களாவர். (சி)

## படைமுகாம் பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு

(கொழும்பு)

வவுனியா மன்னார் மட்டக்களப்பு, மணலாறு பகுதிகளில் உள்ள படையினருக்கு பெய்து வரும் மழை நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது.

படைமுகாம்கள் இருக்கும் பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மட்டு மாவட்டத்தில் பலகிராமங்களில் வெள்ளம்

### 25 ஆயிரம் குடும்பங்கள் வீடிழப்பு

(மட்டக்களப்பு)

தொடர்ந்து பெய்யும் கடும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலகப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, ஓட்டமாவடி ஆகிய பகுதிகளே வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இம்மூன்று பகுதிகளிலிருந்தும் 25 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன. 60 ஆயிரம் ஏக்கர் நெற்காணியும் பாதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகிறது.

மட்டக்களப்பிற்குசெல்லும் ஒரேயொரு வீதியான மன்னம்பிட்டிய பாதை போக்குவரத்து செய்யமுடியாத அளவு வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

## கரையோர அணைக்கட்டுகள் பருத்தித்துறையில் சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் கரையோர அணைக்கட்டுக்கள் சேதமடைந்து வருகின்றன. பல ஆண்டு காலமாக கட்டப்பட்டு பராமரிப்புச் செய்யப்படாமல் இருக்கும் சீமெந்து அணைக்கட்டுக்கள் கடல் அலைகளினால் அரித்து சேதமடைந்து வருகின்றன.

பருத்தித்துறை முதல் பொலிகண்டி வரையில் உள்ள இவ் அணைக்கட்டுக்களே சேதமடைந்து வருகின்றன. இவ் அணைக் கட்டுக்களுக்கு உரியநடவடிக்கைகள்எடுக்கப்படாவிடின் கரையோரப் பகுதிக்குடியிருப்புகளுக்கு ஆபத்துக்கள் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. (யோ)

### போரை

நாம் தமிழர்களை ஒரு தீவிர நிலைக்கு தள்ளி விட்டோம், ஒரு மக்களை கொல்லவோ, அழிக்கவோ எம்மால்

### பொதுச் சந்தை அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

# 3,75,000 பேர் மழையினால் வீடிழப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெய்த கடும் மழையினால் மூன்றுலட்சத்து 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இருப்பதாக சமூகசேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த இருவாரங்களில் பெய்த கடும் மழையினால் இவ் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக சமூகசேவைகள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 35ஆயிரத்து 320குடும்பங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 18ஆயிரத்து 372குடும்பங்களும் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து இருப்பதாக சமூக சேவை திணைக்கள பணிப்பாளர் எம். விஜேவன்ச தெரிவித்துள்ளார்.

மணலாறு மாவட்டத்தில் 12அடிக்கு மேல் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது எனவும், ஒருகோடி ரூபாய்க்கு மேல் நிவாரணப்பொருள்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இவை வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வீடுகள், பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படுவதாகவும் இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் அவர்களின் இருப்பிடங்கள் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொண்டமானாறுபகுதியில் கடற்படையினர் தாக்குதல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தொண்டமானாறு கடற் பகுதியில் ரோந்துசென்ற சிறிலங்கா கடற்படையினர் அப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள்மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

அக் கடற்பரப்பில் நேற்றுக் காலை 6-30 மணியளவில் ரோந்துசென்ற கடற்படையினர் மீனவர்கள் மீது பதினைந்து நிமிடங்கள் இடைவிடாது தொடர்ச்சியாக தாக்கினர். மீனவர்கள் தொழில் பொருள்களை கடலில் விட்டுவிட்டு ஒருவாறு கரைசேர்ந்தனர்.

மீனவர்கள் மீது மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்கள் சில கரையோரக் குடியிருப்புப் பகுதிகளிலும் விழுந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (யோ)

### உதைபந்தாட்டம்

புனித யாகப்பர் தேவாலய கட்டட நிதிக்காக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று கென்றிஸ் எதிர் அரியாலையும் ஞானமுருகன் எதிர் அன்ரனிஸும் மோத உள்ளன. முதலாவது ஆட்டம் பி. ப. 3-00 மணிக்கும் இரண்டாவது ஆட்டம் பி. ப. 4-00 மணிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### அறிவியல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

''நங்கூரம்'' சஞ்சிகையின் சார்பில் இன்று அறிவியல் அரங்கு ஒன்று யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 30 முதல் மாலை 5-00 மணி வரை இரு அமர்வுகளாக நடைபெற இருக்கும் இந்த அறிவியல் அரங்கில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

### சீன விமானம் கடத்தப்பட்டது

(பீக்கிங்)

சீன விமானம் ஒன்று தாய்வானுக்கு கடத்தப்பட்டுள்ளது எட்டு விமானிகள் உட்பட ஐம்பது பயணிகள் பய

## மார்ச் மாதத்திற்குமுன் ஜனாதிபதித் தேர்தல்?

### அரசு தீவிர பரிசீலனை

எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசு உயர் மட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

ஜனாதிபதித்தேர்தலா அல்லது பாராளுமன்றத் தேர்தலா முதல் நடத்துவது பற்றி தெரியவரவில்லை என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் மார்ச் மாதத்திற்கு முன்னர் இரண்டில் ஒரு தேர்தலை நடத்துவதற்கு அரசு யோசனை செய்துவருவதாக தெரியவருகிறது என்று அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ். மாநகர சபைக்கு யுனிசெப் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டிற்கு யாழ் மாநகரசபையின் பகுதிகளுக்குள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவென யுனிசெப் நிறுவனம் ஐந்து இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மேலும் இந்நிறுவனம் யாழ் மாநகர சுகாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இவ் உதவிகள் அடுத்த வருட நடுப்பகுதியில் தமக்கு கிடைக்குமென யாழ். மாநகர சபைக் கணக்காளர் தெரிவித்தார். (பா)

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

28-12-1993

மருத்துவர்கள் :

❋ சமூக மருத்துவம் :

வைத்திய கலாநிதி M. K. முருகானந்தன்
''ஆங்கில மருந்து வகைகளின் ஆலோசனையற்ற பயன்பாட்டின் ஆபத்தான விளைவுகள்''

❋ விஞ்ஞானம்

திரு.V S. குணசீலன் (விஞ்ஞான விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)
''இயற்கைச் சமநிலையில் மனிதனின் தலையீடு''

❋ உளவியல்

திரு. N. குகதாஸன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)
''பரீட்சைகளை எதிர்கொள்வது எப்படி''

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(7070) செயலாளர்


ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி)
தினமும் காலை 11.45 முதல் பிற்பகல் 3.30 மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி. (சி-8187)


# கரையோர அணைக்கட்டுகள் பருத்தித்துறையில் சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் கரையோர அணைக்கட்டுக்கள் சேதமடைந்து வருகின்றன. பல ஆண்டு காலமாக கட்டப்பட்டு பராமரிப்புச் செய்யப்படாமல் இருக்கும் சீமெந்து அணைக்கட்டுக்கள் கடல் அலைகளினால் அரித்து சேதமடைந்து வருகின்றன.

பருத்தித்துறை முதல் பொலிகண்டி வரையில் உள்ள இவ் அணைக் கட்டுக்களே சேதமடைந்து வருகின்றன. இவ் அணைக் கட்டுக்களுக்கு உரியநடவடிக்கைகள்எடுக்கப்படாவிடின் கரையோரப் பகுதிக்குடியிருப்புகளுக்கு ஆபத்துக்கள் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. (யோ)

## போரை

நாம் தமிழர்களை ஒரு தீவிர நிலைக்கு தள்ளி விட்டோம், ஒரு மக்களை கொல்லவோ, அழிக்கவோ எம்மால் முடியாது. இனத்துவம் என்பது ஒரு நிதர்சனம் என பிதா திஸ்ஸ பாலசூரியா மேலும் தெரிவித்தார்.

இடம், வேலைவாய்ப்பு, கல்வி, பாதுகாப்பு போன்ற அம்சங்களில்தமிழர்களுக்கு பிரச்சினை உள்ளது என்பதை ஐ.தே.க. 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒப்புக்கொண்டது எனவும் அவர்சுட்டிக்காட்டினார். வடகிழக்குப் பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்ற ஜனாதிபதி விஜேதுங்கவின் நிலையை அவர் வன்மையாகக் கண்டித்தார். இந்தப் பிரச்சினைக்கு இன்றைய அரசியல் தலைமைப்பீடம் ஓரளவு பொறுப்பேற்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பூநகரி தாக்குதலின் பின் போர் மீண்டும் அரசியல் மயப்படுத்தப்படுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த டாக்டர் ஜெயதேவா உயங்கொட தெரிவித்தார். வெளியார் தலையீட்டினால் பாலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டது. ஐ. நா. தலையீட்டினால் சோமாலிய, கம்போடியா பிரச்சினை தீர்வு போன்ற அண்மைக்கால உதாரணங்களில் இருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பிரிட்டிஷ் அரசுக்கு - ஐ. ஆர். ஏக்கும் இடையில்நடந்த பேச்சுக்களின் முன்னேற்றத்தையும் பிரிட்டிஷ் - அயர்லாந்துகளிடையிலான அண்மைய உடன்படிக்கையையும் இலங்கை அரசு உன்னிப்பாக ஆராய வேண்டும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பாக்கியசோதி சரவணமுத்து குறிப்பிட்டார்.

## பொதுச் சந்தை அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

செம்பியன் பற்று வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் பொதுச் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. (36)

## இருநூறு

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட இந்தப் பொதிகள் அனைத்தும் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

வடபகுதிக்கு அனுப்பி வைப்பதற்காக கொழும்பில் வைக்கப்பட்டுள்ள மிகுதி தபால் பொதிகள் யாவும் படிப்படியாக இடம்பெறும் சோதனைக்குப் பின்னர் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று அந்தஅதிகாரி மேலும் கூறினார்.

## அறிவியல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

''நங்கூரம்' சஞ்சிகையின் சார்பில் இன்று அறிவியல் அரங்கு ஒன்று யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 30 முதல் மாலை 5-00 மணி வரை இரு அமர்வுகளாக நடைபெற இருக்கும் இந்த அறிவியல் அரங்கில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

## சீன விமானம் கடத்தப்பட்டது

(பீக்கிங்)

சீன விமானம் ஒன்று தாய்வானுக்கு கடத்தப்பட்டுள்ளது எட்டு விமானிகள் உட்பட ஐம்பது பயணிகள் பயணம் செய்த இந்த விமானத்தில் வெடிமருந்துப் பொருள்கள் இருப்பதாகத் தெரிவித்த ஒரு ஆணும், பெண்ணும் கடத்திச் சென்றனர். கடந்த ஏப்ரல் முதல் தாய்வானுக்கு கடத்தப்பட்ட சீன விமானங்களில் இது பத்தாவது என்பது குறிப்பிடத்தக்கது.

## வயோதிபர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் விரக்தியுற்ற குடும்பஸ்தரான வயோதிபர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார். கே. கே. எஸ். வீதியில் வசித்து வந்த புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கு. இராசலிங்கம் (வயது 70) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவர் ஆவார். குடும்பத்தில் நிலவிய கஷ்ட நிலையால் மனமுடைந்த இவர் ஞாயிறு (26ஆம் திகதி) இரவு நஞ்சிடம் தஞ்சம் புகுந்தார் என தெரிவிககப்படுகிறது. இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார் (22)

## தனியார்

பயிற்சிவழங்கும்நபர் தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சு வீரிவாக ஆராயும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்ளும் அரசாங்க, திணைக்கள, கூட்டுத்தாபனம் மற்றும்அரசு சார்பு நிறுவனங்கள் தொடர்பாக விதிமுறைகள்மிகதீவிரப் படுத்தப்படவுள்ளது.

புலிகள் பாதுகாப்பு சேவையில் ஊடுருவுவதன் மூலம் சில தாக்குதல்களுக்கு வழிவகுக்கப்படலாம் எனவும் எனவே இது குறித்து அவதானமாக இருக்குமாறும் சகலருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவ்உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். மாநகர சபைக்கு யுனிசெப் நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டிற்கு யாழ் மாநகரசபையின் பகுதிகளுக்குள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவென யுனிசெப் நிறுவனம் ஐந்து இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மேலும் இந்நிறுவனம் யாழ் மாநகர சுகாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இவ் உதவிகள் அடுத்த வருட நடுப்பகுதியில் தமக்கு கிடைக்குமென யாழ். மாநகர சபைக் கணக்காளர் தெரிவித்தார். (பா)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 28-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11779

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2524, 41-8096, 41-9487, 40-4760, 42-9220, 26 4610, 42-1464, 36-0923, 37-1145, 27-9772, 24-8197, 28-4672, 26-2585, 26,1741, 28-9327, 24-4560, 24-6972, 26-5777, 27-2084, 26-4443, 28-0854, 28-8951, 26-8419, 27-4023, 42-3419, 27-5822, 42-0849, 24-5041, 24-5967, 24-4207.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-7717, 26-7540, 27-4628, 24-6475, 27-4301, 26-0560, 28-1706, 27-9404, 28-5484, 24-0576, 41-1531.

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தாதேவி சபாநாதன்

நாவற்குழி பிரதேசசபை நூலகர் திருமதிவசந்தாதேவி சபாநாதன் அவர்கள் (28-12-93) நேற்று காலமானார். இவர் இ. சபாநாதன் (கிராமசேவை உத்தியோகத்தர், கைதடி, நாவற்குழி) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயதீபன், யசீதரன், யதுமதி, ஜெயநீதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற வ. கணபதிப்பிள்ளை (இ. போ. ச), மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், இந்திராதேவி, இராதாதேவி, இராஜேந்திரன்(கனடா), தெய்வேந்திரன் (லண்டன்), செல்வேந்திரன் (கனடா), இரவீந்திரன் (இந்தியா), குலேந்திரன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்), சிவனேந்திரன் (கனடா), காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நா. இளையப்பா (இளைப்பாறிய அதிபர்), அன்னப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை), மார்க்கண்டு உ. அ. அ. பணி மனை, பளை) ஆகியோரின் அன்பு மருமகளும், பரமராஜா, சுரேந்திரன் (இ மி ச), நிர்மலாதேவி, வைத்திய கலாநிதி உமாமகேஸ்வரி (கனடா), நிரஞ்சனாம்பிகை (லண்டன்), பிரேமா (கச்சேரி, கிளிநொச்சி), உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (28-12-93) பி.ப 5-00 மணியளவில் மறவன்புலோ இந்து மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சபாநாதன்
(கணவன்)
(கிராமசேவை உத்தியோகத்தர்,
கைதடி, நாவற்குழி.)

(7075)


# பாடசாலை மாணவர்களுக்கு

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

மலரப்போகும் புத்தாண்டிலிருந்து சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய "டொயாட்டா கோஸ்ரர்" பஸ்வண்டி ஒன்று மல்லாகத்தில் இருந்து வேம்படி மகளிர் பாடசாலைச் சந்தி, யாழ். நகர் வரை பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளது.

பயணம் செய்ய விரும்புவோர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

★ மது புத்தகசாலை
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

★ பவித்திரா பேஷன் கவுஸ்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

★ நித்தியா ஸ்பொட்
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

★ சீக்கோ காட்வெயர்
கே. கே. எஸ். வீதி,
தாவடிச் சந்தி,

★ தாசன் ஸ்ரூடியோ
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(சி-8235)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.